# மெட்ரோ பயணியருக்கு மின் ஸ்கூட்டர் அறிமுகம்

சென்னை, பிப். 19–
கிண்டி உட்பட, நான்கு மெட்ரோ ரயில் நிலையங்களில், பயணியருக்கு மின்சார ஸ் கூட்டர் வசதி செய்யப்பட்டுள்ளது.

சென்னையில், விமான நிலையம் மற்றும் பரங்கிமலையில் இருந்து, சென்ட்ரல் வரையும், விமான நிலையத்தில் இருந்து, வண்ணாரப் பேட்டை வரையும், மெட்ரோ ரயில் இயக்கப் படுகிறது.

இந்த ரயில்களில், பயணியர் வருகையை அதி கரிக்க, நிர்வாகம் பல்வேறு ஏற்பாடுகளை செய்து வருகிறது. மெட்ரோ ரயில் பயணிய ருக்கு, வாடகை இல்லாத சைக்கிள், ஷேர் ஆட்டோ, கார், வேன் வசதி, மற்றும் குறிப்பிட்ட நிலையங்களில், வாடகைக்கு மோட் டார் சைக்கிள் மற்றும் ஸ்கூட்டர் வசதியும் செய்யப்பட்டுள்ளன.

இத்துடன், கிண்டி, ஆலந்துார், வடபழனி மற்றும் அண்ணா நகர் டவர் மெட்ரோ ரயில் நிலையங்களில், வாடகைக்கு மின்சார ஸ்கூட்டர் வசதி, நேற்று முதல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வசதி, மற்ற நிலையங்களிலும், படிப்படி யாக அமல்படுத்தப்பட உள்ளது. இவ்வசதிக்கு, மெட்ரோ ரயில் நிறுவனம், இடவசதி மட்டும் அளித்துள்ளது.

தனியார் மின்சார ஸ்கூட்டர் நிறுவனத்தால், திட்டம் செயல்படுத்தப்படுகிறது.